***கவனிக்க.***- *28.10.2011 ஆந் திகதிய வர்த்தமானியின் பகுதி II மற்றும் பகுதி IV (அ) ஆகியன பிரசுரிக்கப்படவில்லை.*

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 1731 - 2011 නොවැම්බර් මස 04 වැනි සිකුරාදා - 2011.11.04**

*1731 ஆம் இலக்கம் - 2011 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 04 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (IIஅ) - விளம்பரங்கள்

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*

| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 1440 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | 1443 |

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு* ***இரண்டு வாரங்களுக்கு முன்னர்,*** *அதாவது 2011, நவெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, ஒற்றோபர் மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

***லக்ஷ்மன் குணவர்தன,***
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானியில் விளம்பரப்படுத்தப்படும் அரச சேவை நியமனங்களுக்கு ஏற்புடைத்தாகும் பொது நிபந்தனைகள்

**1. வேண்டப்படும் பொதுத் தகைமைகள் :**

*1.1 விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபித்தல் வேண்டும். இலங்கையர் என்பவர் இலங்கைப் பிரசாவுரிமைச் செய்சட்டத்தினால் வரையறை செய்யப்பட்டபடி வம்சாவழியாகவோ பதிவுவழியாகவோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.*

*1.2 சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான அல்லது அதைவிட உயர்ந்த பரீட்சையில் சித்தியடைந்திருத்தல் ஆகக்குறைந்த கல்வித் தகைமையாக விதிக்கப்பட்டுள்ள எந்தப் பதவிக்கும் விண்ணப்பிக்கும் வேட்பாளர் ஒருவர் சிரேட்ட பாடசாலைச் சான்றிதழ் பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அவர் சிங்களவராக இருந்து சிங்கள மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து அல்லது தமிழராகவிருந்து தமிழ் மொழி மூலத்தில் கல்வி கற்றவராகவிருக்குமிடத்து, விடயத்துக்கேற்ப, சிங்கள மொழியில் அல்லது தமிழ் மொழியில் சித்திபெற்றிருத்தல் வேண்டும். இத்தேவைப்பாடு (1961, சனவரி 01 ஆந் தேதிக்கு முற்பட்டவொரு திகதி தொடக்கம் அரசாங்க சேவையில் இருப்பவர்களுக்கும் அரசாங்க சேவையில் பிறபதவிகளுக்கு நியமனங்களைப் பெற முயற்சி செய்பவர்களுமானவர்களும் ஏற்புடைத்தாகாது).*

*1.3 சிங்களத்தில் அல்லது தமிழில் கல்வி கற்காதவர்களும் விதித்துரைத்த அரச கரும மொழித் தேர்ச்சி சோதனைகளில் சித்தியடையத் தவறியமைக்காக தகுதிகூர் நிலைப்பரீட்சார்த்த நியமனங்கள் முடிவுறுத்தப்பட்டவர்களுமான "புதிய சேர்வாளர்கள்" ஆகிய அரசாங்க உத்தியோகத்தர்களினால் அனுப்பப்படும் விண்ணப்பங்கள், அவர்கள் அப்பதவிக்கு விதித்துரைக்கப்பட்ட அதியுயர் தேர்ச்சிச் சோதனையிலிருந்து விலக்களிப்பைப் பெறும் உரிமையை வழங்கக்கூடிய தகைமைகளைப் பெற்றிருந்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.*

**2. சேவை நிபந்தனைகள் : பொது**

*2.1 நிதி ஒழுங்குவிதிகள், தாபனக்கோவை திணைக்களக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் ஆகியவற்றுடன் அரசாங்கத்தினால் காலத்துக்குக்காலம் விதிக்கப்படும் வேறு எவையேனும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே சகல அரச சேவை உத்தியோகத்தர்களும் இருப்பர்.*

*2.2 அரச உத்தியோகத்தர் ஒருவர், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைக்) கட்டளைச் சட்டத்தின் நியதிகளின்படி பிணை செலுத்தும்படி வேண்டப்படலாம்.*

*அந்தப் பிணை சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர் தீர்மானிக்கும் அத்தகைய தொகையாகவும் அத்தகைய விதத்திலும் செலுத்தப்படல் வேண்டும்.*

*2.3 அரச உத்தியோகத்தர் ஒருவர் தீவின் எந்தப் பகுதியிலாவது சேவையாற்றும்படி கேட்கப்படலாம்.*

***3. நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகும் சேவை நிபந்தனைகள் :***

*3.1 நிரந்தர பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தர்கள் மேலே 2 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாக இருக்கவேண்டியதுடன் பின்வரும் நிபந்தனைகளுக்கும் அமைவாக இருத்தல் வேண்டும் :-*

*3.1.1 சகல நியமனங்களும் ஏதாவது ஒரு பதவி தொடர்பாக நீண்ட காலம் தேவையெனக் கருதப்பட்டாலொழிய மூன்று வருடத்துக்கு தகுதிகூர் நிலையிலேயே இருக்கும். தகுதிகூர் காலத்தின் ஏதாவது ஒரு நேரத்தில் காரணம் எதுவும் கொடுக்காமலே ஒரு நியமனத்தை நிறுத்திவைக்கலாம்.*

*3.1.2 சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் IV ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையைச் செயற்படுத்துவதற்கு காலத்துக்குக் காலம் ஆக்கப்படும் எந்தச் சட்டங்களுக்கும் அல்லது ஒழுங்குவிதிகளுக்கும் அல்லது விதிகளுக்கும் அமைந்து நடக்குமாறு வேண்டப்படுவர்.*

*3.1.3 சிங்கள மொழி மூலத்தில் அல்லது தமிழ் மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேராத சகல அரசாங்க உத்தியோகத்தர்களும் அரசகரும மொழிகளிலொன்றில் பணியாற்றும் அறிவைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டப்படுவர்.*

*3.1.4 அரசாங்க சேவையில் சிங்களம் அல்லது தமிழ் தவிர்ந்த ஒரு மொழி மூலத்தில் அரசாங்க சேவையில் சேர்ந்த உத்தியோகத்தரொருவர் தகுதிகூர் நிலைக்காலம் முடிவுற்றதன் பேரில் பதவியில் உறுதிப்படுத்தல் பிறவற்றுள், அவர் அரச கரும மொழிகளிலொன்றில் நியமனத் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்குள் I ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் இரண்டு வருடங்களுக்குள் II ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் (ஏற்புடையவிடத்து) மூன்று வருடங்களுக்குள் III ஆம் தரத் தேர்ச்சிச் சோதனையிலும் சித்தியடைவதில் தங்கியிருக்கும். ஒரு தேர்வுக்கென விதிக்கப்பட்ட காலத்தினுள் அதில் சித்தியுறத் தவறினால் வேதன ஏற்றம் இடைநிறுத்தப்படும். அந்த இடைநிறுத்தம் விதிக்கப்பட்ட காலத்துக்கு மேல்வரும் ஆறு மாதங்களுள் தேர்வில் சித்தியுறத் தவறினால் நிறுத்தமாக மாற்றப்படும். அத்தகைய ஏற்ற நிறுத்தம் தேர்வில் எய்தும் வரையில் அல்லது 3.1.6 ஆம் பிரிவின் ஏற்பாடுகள் ஏற்புடைத்தாகும். அத்தகைய காலம் வரையில் செயலில் இருக்கும்.*

*3.1.5 அத்தகைய உத்தியோகத்தர்களுக்கு நியமனம் வழங்கப்பட்டதன் பேரில் அரசகரும மொழிகளிலொன்றில் தேர்ச்சி பெறுவதற்கு 6 மாத காலத்திற்கு முழுச் சம்பளத்துடனான வசதிகள் வழங்கப்படல் வேண்டும். அதன் பின்னர் அவர் தொடர்புடைய தேர்ச்சிப் பரீட்சையில் சித்தியடையுமாறு வேண்டப்படுவர். அவர் சித்தியடையத் தவறுமிடத்து முழுச் சம்பளத்துடனான 6 மாத காலத்திற்கு உடனடியாகப் பின்னர், அவர் தமது வழக்கமான கடமைகளை நிறைவேற்றும் வேளையில், 2 வருட காலத்திற்குள் பரீட்சையில் சித்தியடைவதற்கு அவருக்குச் சந்தர்ப்பம் வழங்கப்படும்.*

*3.1.6 இந்த விதித்துரைத்த 2 1/2 வருட காலத்திற்குள் பரீட்சையில் அவர் சித்தி அடையத் தவறினால் அவருடைய சேவை முடிவுறுத்தப்படும்.*

*3.1.7 அரச சேவையின் நிரந்தரமான பதவியொன்றில் ஏற்கனவே பதவி உறுதிசெய்யப்பட்ட அரச உத்தியோகத்தர் ஒருவர் அரச சேவையில் உள்ள வேறொரு நிரந்தர பதவியொன்றில் நியமிக்கப்படுமிடத்து அவர் இயல்பாகவே தகுதிகூர் நிலையில் இருக்க வேண்டியதில்லை.*

*3.1.8 தெரிவுசெய்யப்பட்ட வேட்பாளர் (அரச சேவையில் ஏற்கனவே நிரந்தர/தற்காலிக பதவிகளை வகிப்பதுடன் ஏற்கனவே வைத்திய பரீட்சைக்கு உள்ளானவர்கள் தவிர்ந்த)தீவின் எந்தப் பகுதியிலாவது சேவை செய்வதற்கு உடற்றகுதி உள்ளவர்கள் என்பதனைச் சோதனை செய்து அவர்கள் அரசாங்க மருத்துவ உத்தியோகத்தர் ஒருவரின் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படல் வேண்டும்.*

**4. பணிக்கமர்த்தும் நியதிகள் :**

*4.1 நிரந்தரமானதும் ஓய்வூதியத்திற்குரித்துடையதுமான பதவிகளுக்கு நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர் அவர்களின் வேதனத்திலிருந்து அறவிடப்பட வேண்டுமென அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள நூற்று வீதத்துக்குச் சமமானவொரு தொகையைத் தங்களின் வேதனங்களிலிருந்து விதவைகள், அனாதைகள் ஓய்வூதியத் திட்டத்திற்கு உதவுதொகையாக வழங்குதல் வேண்டும்.*

*4.2 நிரந்தர அல்லது தற்காலிகப் பதவிகளுக்கு ஏற்பாட்டு நிதிய அடிப்படையில் நியமிக்கப்படும் அரச உத்தியோகத்தர்கள் தங்களின் திரட்டிய வேதனங்களின் 6% ஐ அரசாங்க சேவை ஏற்பாடு நிதியத்துக்கு உதவு தொகையாக வழங்குமாறு வேண்டப்படுவர். நிதி ஆண்டின் இறுதியில் கட்டாய உதவுதொகையாகக் குறித்த நிதியத்திற்கு வரவு வைக்கப்பட்டுள்ள தொகையின் 150% க்குச் சமமானவொரு தொகையைக் குறித்த நிதியத்துக்குத் தனது உதவுதொகையாக அரசாங்கம் செலுத்தும்.*

*4.3 அரச சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நியமனங்கள் வகிப்பவர்களும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கும் நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுக்குமான உத்தியோகத்தர்களுக்கு உள்ளூராட்சிக் சேவையில் ஓய்வூதியத்திற்குரித்துடைய பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படுபவர்களுமான உத்தியோகத்தர்களுக்கு முறையே உள்ளூராட்சிச் சேவையிலும் அரச சேவையிலுமுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும்.*

*4.4 ஓய்வூதியப் பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையவையான, அரச சேவையிலுள்ள பதவிகளுக்கு நியமிக்கப்படுவதற்காக விடுவிக்கப்படும் தரைப்படை, கடற்படை, வான்படை ஆகியவற்றின் நிலையப்படை ஆளணியினர்க்கு அரச சேவையிலுள்ள அவர்களது பதவிகளில் ஓய்வூதியத்திற்குரித்துடைய நிலையளிக்கப்படும். இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் ஓய்வூதியத்திற்குரித்துடையதெனப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள ஓர் அரச உத்தியோகத்தர் ஆக அளிக்கப்படுமொரு பதவியொன்றில் நியமனத்தை ஏற்பதாக விடுவிக்கப்படும், படைத்தாங்கு சேவைகளின் உறுப்பினரொருவரினது இழக்கப்படாத முழுச் சம்பள சேவைக்காலமானது இப்பிரமாணக் குறிப்புக்களிலுள்ளவற்றிற்கு மாறாக யாதேனும் இருந்தபோதிலும் இப்பிரமாணக் குறிப்புகளின்கீழ் கொடுக்கப்படற்பாலதான ஏதேனும் ஓய்வூதியத்தின் அல்லது பணிக்கொடையின் பொருட்டுக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்படும்.*

**5. யுத்த சேவைச் சலுகை :**

*5.1 ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின் ஐக்கிய இராச்சியத்தின் போர்ப்படைகளில் சேவையாற்றியவர்களுக்கும், தீயணைக்கும் படை, விமானத் தாக்கப்பாதுகாப்புப் படை, ஊர்ப்பாதுகாப்பு படை என்பனவற்றிலும் முழுநேரக் கடமையாற்றியவர்கள் அவர்கள் தாமாகவே இப்படைகளை விட்டு விலகியிருக்காவிடின், 1939 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 31 ஆந் திகதிவரையில் உள்ள அச்சேவைக்காலத்தை தகைமை நோக்கத்தின் பொருட்டு மாத்திரம் தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். ஆயின், அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதிக்கு முன்பு சேர்ந்திருத்தல் வேண்டும். அத்துடன் அவர்கள் பற்றிய சேவை திருப்திகரமானதாகவும் தொடர்ச்சியானதாகவும் இருத்தல் வேண்டும்.*

**6. அரசசேவையில் சேவையாற்றும் உத்தியோகத்தர்கள் :**

*6.1 எல்லாத் தகைமைகளையும் உடைய அரச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் தொடர்புள்ள திணைக்களத் தலைவர்களினூடாக அனுப்பப்படல் வேண்டும். அரச சேவையில் நிரந்தரமான பதவிகளை வகிக்கும் அரச உத்தியோகத்தரின் விண்ணப்பங்களைப் பொறுத்தமட்டில் விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்பட்டால் அவர்கள் புதிய பதவியை ஏற்றுக்கொள்வதற்கு அவரை விடுவிக்க முடியுமா அல்லவா என்பதைத் திணைக்களத் தலைவர்கள் தாம் விண்ணப்பங்களை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.*

*6.2 விண்ணப்பதாரி குறிப்பிட்ட ஒரு நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகம் கொடுக்கும்படி வேண்டப்படலாம். அது தொடர்பாகப் பிரயாணச் செலவோ வேறு செலவுகளோ கொடுக்கப்பட மாட்டாது.*

*6.3 விண்ணப்பதாரியைச் சிபாரிசு செய்ய விரும்பும் எவராயினும் ஒருவர் சான்றிதழ் ஒன்றின் மூலம் அப்படிச் செய்யலாம். விண்ணப்பதாரி ஒருவரைத் தெரிவுசெய்வதற்கு எந்தவொரு விதத்திலாவது ஆதரவு தேடினால் அல்லது செல்வாக்கைப் பிரயோகிக்க எத்தனித்தால் அது அத்தகைய விண்ணப்பதாரியைத் தகைமையற்றவர் ஆக்கிவிடும்.*

*6.4 விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள கூற்று ஏதாவது பிழையானதாக இருந்து அப்பிழை விண்ணப்பதாரர் தெரிவுசெய்யப்படுவதற்கு முன்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டால் அது அவரைத் தகுதியற்றவராக்குவதற்கு உட்படுத்தும். அவர் தெரிவுசெய்யப்பட்ட பின்பு அப்பிழை கண்டுபிடிக்கப்படின் அது அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்கு உட்படுத்தும்.*

*6.5 விளம்பரத் தேவைகளுக்கு அமைபடாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

**7. தகைமையின் நோக்கத்துக்காக வேதனத்தின் பொருள் வரையறை :**

*7.1 தகைமையின் நோக்கில் வேதனம் திரட்டிய வேதனம் மட்டும் எனப் பொருள்படும். அதில் பதில் வேதனம். படி முதலியன சேர்ந்திருக்கா.*

**8. ஆட்சேர்த்தல், பதவி உயர்வு வழங்குதல் தொடர்பான புதிய தேசிய கொள்கை :**

*இனிமேல் வெளியிடப்படவிருக்கும் அரசாங்க நிருவாக சுற்றறிக்கைகளின் மூலம் திருத்தங்கள் மேற்கொள்வதற்கு உட்பட்டு 1990.03.09 ஆந் திகதிய இல. 15/90, 1990.03.25 ஆந் திகதிய இல. 15/90 (i), 1990.06.15 ஆந் திகதிய 15/90 (ii) கொண்ட அரசாங்க நிருவாகச் சுற்றறிக்கைகளில் காட்டப்பட்டுள்ள கொள்கைகளுக்கு இணங்க அரசாங்க சேவைக்கு, மாகாண அரசாங்க சேவைக்கு, அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கான ஆட்சேர்ப்புக்கள், பதவி உயர்வுகள் என்பன 1990.01.01 ஆந் திகதி தொடக்கம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.*

# பரீட்சார்த்திகள் கவனிக்க வேண்டிய விதிகளும் அறிவுறுத்தல்களும்

*1968 ஆம் ஆண்டின் 25 ஆம் இலக்கத்தைக் கொண்ட பரீட்சைகள் செய்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்கச் செயற்படுதற்கு பரீட்சார்த்திகள் அனைவரும் கடப்பாடுடையவர்களாவர்.*

எல்லாப் பரீட்சார்த்திகளும் கீழ்வரும் விதிகளுக்கமைய நடந்துகொள்ள வேண்டும் விதிகளை மீறி நடக்கும் பரீட்சார்த்தி பரீட்சை ஆணையாளரின் விரகின்படி கீழ்காணும் தண்டனைகளில் ஒன்றினையோ பலவற்றையோ ஏற்றவாறு பெறுவர்.

(i) முழுப்பரீட்சையிலிருந்து அல்லது அதன் ஒரு பகுதியிலிருந்து நிறுத்திவைக்கப்படுவர். ஒரு பாடத்திலிருந்தோ அதன் பகுதியிலிருந்தோ நிறுத்திவைக்கப்படுவர் ;

(ii) ஒரு பாடத்துக்கோ பரீட்சைக்கோ தகுதியற்றவர் ஆக்கப்படுவர் ;

(iii) ஒரு வருடத்துக்கு அல்லது இரண்டு வருடங்களுக்குப் பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்துவைக்கப்படுவர் ;

(iv) சீவியகாலம்வரை பரீட்சைக்குத் தோற்றாதவாறு தடுத்து வைக்கப்படுவர் ;

(v) ஒரு கால எல்லைக்குத் தராதரப் பத்திரத்தைப் பயன்படுத்த முடியாமல் தடுத்துவைக்கப் படுவர் ;

(vi) பரீட்சார்த்தியின் நடத்தை பற்றி அவருடைய மேலதிகாரிக்குத் தெரிவித்தல் அல்லது பொலிசாரிடம் பரீட்சார்த்தியை ஒப்படைத்தல் அல்லது விடயத்தைப் பொலிசாரிடம் ஒப்படைத்தல்.

பரீட்சைக்கு முன்னரோ, பரீட்சை நடக்கும்பொழுதோ பரீட்சைக்குப் பின்னரோ தேவையான நடவடிக்கை எவையேனும் அவசியமெனப் பரீட்சார்த்தி தீர்மானித்தால் அத்தீர்மானம் முடிவானதாகக் கொள்ளப்படும். எனினும், அரசாங்க சேவைக்குப் பரீட்சார்த்திகளைத் தெரிந்தெடுக்கும் பரீட்சைகளைச் சார்ந்த பரீட்சாதிகாரியின் தீர்மானம் அரசாங்க சேவை அதிகார சபையால் பரிசீலனை செய்வதற்குட்பட்டதாகும்.

1. ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பரீட்சை மண்டபத்தைச் சார்ந்த இடங்களிலிருந்து மேற்பார்வையாளருக்கோ அவருடைய உதவி உத்தியோகத்தருக்கோ மற்றைய பரீட்சார்த்திகளுக்கோ வசதியீனத்தையும் தொந்தரவையும் உண்டுபண்ணாது நடந்துகொள்ள வேண்டும். பரீட்சை மண்டபத்துள் பிரவேசிக்கும் போதும் வெளியேறும்போதும் பரீட்சார்த்தி அமைதியாக நடந்துகொள்ளுதல் வேண்டும்.

2. பரீட்சார்த்திகள் மேற்பார்வையாளரின் அதிகாரத்துக்குட்பட்டவராவர். பரீட்சை நடக்கும்பொழுதும் அதற்கு முன்னரும் பின்னரும் பரீட்சை மேற்பார்வையாளரும் கவனிப்பாளரதும் கட்டளைப்படி நடந்து பரீட்சை மேற்பார்வையாளருக்கு உதவிசெய்தல் வேண்டும்.

3. பரீட்சை மண்டபத்தில் பூரண அமைதி நிலவச் செய்ய வேண்டும். பரீட்சார்த்திகள் எக்காரணம் பற்றியும் மண்டபத்திலுள்ள மற்றும் பரீட்சார்த்திகளுடனோ வெளியேயுள்ள பரீட்சார்த்திகளுடனோ தொடர்புவைத்துக்கொள்ள அனுமதிக்கப்பட மாட்டார். பரீட்சை உத்தியோகத்தர்களுடன் மாத்திரமே தொடர்பு வைத்துக்கொள்ள அனுமதிக்கப்படுவர். மிக அத்தியாவசியமான நிலைமையுண்டானால் மேற்பார்வையாளரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ள வேண்டும்.

4. மேற்பார்வையாளரால் ஒழுங்குசெய்யப்பட்ட மேசையைவிட வேறெந்த மேசையையும் பரீட்சார்த்தி உபயோகிக்கக்கூடாது. மேற்பார்வையாளரின் அனுமதியோடன்றி ஒரு மாற்றமும் செய்யக்கூடாது. பரீட்சார்த்தி தமக்கு ஒழுங்குசெய்யப்படாத வேறு ஒருவரின் ஆசனத்திலிருந்தால் அவர் நேர்மையீனமான முறையில் நடந்துகொள்ள எத்தனித்ததாகக் கருதப்படுவர்.

5. பரீட்சார்த்தி தமது விடைத்தாளில் பெயரை எழுதாது சுட்டிலக்கத்தையே எழுதுதல் வேண்டும். ஒரு பரீட்சார்த்தி பிறிதொரு பரீட்சார்த்தியின் சுட்டிலக்கத்தைத் தமது விடைத்தாளில் குறித்திருந்தால் அவர் ஏமாற்றுவதற்கு எத்தனித்ததாகக் கருதப்படுவர். சுட்டிலக்கம் தெளிவற்ற முறையில் எழுதப்பட்டிருந்தால் அவ்விடைத்தாள் கவனிக்கப்பட மாட்டாது.

6. பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட விடையெழுதுந்தாளையோ வெறெவ்விதப் பொருளையோ பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே எடுத்துக்கொண்டு போதல் கூடாது. அத்தகைய விடை எழுதுந்தாளும் பொருளும் பரீட்சாதிகாரிக்குச் சொந்தமானவையாகும். இவ்விதிக்கு மாறாக நடந்துகொண்டால் அது நேர்மையீனமான நோக்கங்களைக் கொண்ட நடத்தையெனக் கருதப்படும்.

7. வினாத்தாள் கொடுக்கப்பட்ட அரை மணித்தியாலத்துக்குப் பின் பரீட்சார்த்தி எச்சந்தர்ப்பங்களைக் கொண்டும் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்கப்பட மாட்டார் இந்த நேர எல்லை கழிந்த பின்னர் தான் பரீட்சார்த்தி பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியேறவும் அனுமதிக்கப்படுவர். செய்முறை அல்லது வாய்மொழிப் பரீட்சை மண்டபத்துக்குள் அனுமதிக்க மறுக்கலாம்.

8. பரீட்சார்த்திகள் எழுதுவதற்கெனக் கொடுக்கப்பட்ட விடைத்தாளில் எழுதுவதேயல்லாமல் ஒற்றுத்தாளிலோ வினாத்தாளிலோ மேசையிலோ வேறெந்த இடத்திலோ எழுதக்கூடாது. இவ்விதிக்கு முரணாக நடந்தால் பரீட்சார்த்தி நேர்மையற்ற நோக்கங்களுடன் நடந்துகொண்டதாகக் கருதப்படுவர்.

9. ஒரு பரீட்சார்த்திக்குக் கொடுக்கப்பட்ட கடதாசியோ விடைப் புத்தகமோ கிழிக்கப்படவோ கசக்கப்படவோ மடிக்கப்படவோ வேறெவ்விதத்திலோ சேதப்படுத்தப்படவோ கூடாது. பருமட்டான வேலை செய்யப்பட்ட கடதாசியும் புறக்குறிப்பு எழுதிய கடதாசியும் விடைத்தாள்களின் பகுதியாக அமைய வேண்டும். அத்தகைய பருமட்டான வேலை முதலியவற்றை ஒழுங்காகக் கீறிவிடவேண்டும். பரீட்சை மண்டபத்தில் எழுதிய எவற்றையும் வெளியே எடுத்துச்செல்லல் ஆகாது. ஒரு வினாவுக்கு ஒன்றுக்கு மேற்பட்ட பலவிடங்களில் விடையெழுதியிருந்தால் தேவைப்படாத விடைகளை வெட்டிவிடுக. இவ்விதிக்கு மாறாக நடந்தால் அது ஏமாற்றுவதற்கு எத்தனமெனக் கருதப்படும்.

10. கணித சம்பந்தமான வினாக்களுக்குப் பிழையான செய்கை வழிகளுடனோ செய்கை வழியில்லாமலோ சரியான விடைகள் இருந்தால் சித்திரத்தில் அலங்கார ரூபச் சித்திரமும், கருத்து வெளிப்பாட்டுச் சித்திரமும் கருத்திலும் அளவிலும் நோக்கத்திலும் பெரும்பாலும் வேறுமொன்றினோடு ஒத்திருந்தால் அல்லது பெரும்பாலும் ஒத்திருந்தால் அவை நேர்மையற்ற வழிகள் மூலம் பெற்றவையெனக் கருதப்படும்.

11. பரீட்சை மண்டபத்துள் ஒரு பரீட்சார்த்தி தம்வசம் அல்லது பக்கத்தில் எவ்விடத்திலேனும் புத்தகம், சட்டைப்பையில் வைக்கக்கூடிய புத்தகம், குறிப்புப் புத்தகம், கொப்பிப் புத்தகம் முதலியவைகளையோ மண்டபத்துள் கொடுக்கப்பட்ட தாள்களைவிட வேறு தாள்களையோ வைத்திருக்கக் கூடாது. தேவைக்கு வேண்டிய மாதிரி வர்ணப்பெட்டியையோ, கணிதக் கருவிப்பெட்டியையோவிட கைப்பை, அழகு செய்செப்பு, பார்சல் முதலியவற்றையோ, கோவை அட்டை, கடதாசி மட்டை, வெற்றுக் கடதாசிக் கொப்பி, மடித்த புதினப்பத்திரிகை, மாட்டுத்தாள் முதலியவற்றையோ வைத்திருக்கக் கூடாது. இப்பிரமாணத்தை மீறி நடப்போர் தண்டனைக்கு உள்ளாவார்கள்.

12. பரீட்சை மண்டபத்திலிருக்கும் பரீட்சார்த்தி தம்வசம் புத்தகங்களையோ குறிப்புக்களையோ வைத்திருக்கக் கூடாது. மேற்பார்வையாளருக்கு தேவையெனக் கண்டால், ஒவ்வொரு பரீட்சார்த்தியும் தம்வசமுள்ள பொருள்கள் இவையெனக் கூறிவிட வேண்டும். இந்நிபந்தனைகளை மீறினால் நேர்மையற்ற முறைகளைக் கையாண்டதாகக் கருதப்படுவர்.

13. பிற பரீட்சார்த்திகளின் விடைத்தாளிலிருந்தோ புத்தகத்திலிருந்தோ கடதாசியிலிருந்தோ குறிப்புகள் முதலியவற்றிலிருந்தோ பரீட்சார்த்திகள் பார்த்து எழுதக்கூடாது என எச்சரிக்கை செய்யப்படுகின்றனர். ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்தியின் விடைத்தாளைப் பார்க்க எத்தனிக்கக்கூடாது. ஒரு பரீட்சார்த்தி வேறொரு பரீட்சார்த்திக்கு உதவிசெய்யவும் அப்பரீட்சார்த்தியிடமிருந்தோ வேறொருவரிடமிருந்தோ உதவி பெறவுங்கூடாது. விடையெழுதப்பட்ட ஒவ்வொரு தாளும் எழுதப்படும் தாளின்கீழ் வைக்கப்பட வேண்டும். விடைத்தாளைக் கண்டபடி மேசைக்குமேல் விடக்கூடாது.

14. தற்காலிகமாகப் பரீட்சை மண்டபத்தைவிட்டு வெளியே செல்ல பரீட்சார்த்திகளுக்கு எச்சந்தர்ப்பத்திலும் அனுமதி கொடுக்கப்படமாட்டாது. எனினும் அவசியமான சந்தர்ப்பங்களில் மேற்பார்வையாளர் வேண்டிய அனுமதியைக் கொடுப்பர். ஆனால் பரீட்சார்த்தி ஒரு கவனிப்பாளருடன் செல்லவிடப்படுவர். பரீட்சை மண்டபத்திலிருந்து வெளியே செல்லும்பொழுதும், மீண்டும் வரும் பொழுதும் சோதிக்கப்படுவர்.

15. பரீட்சை மண்டபத்தில் அல்லது பரீட்சைக்கு முன்னர் ஒருவருக்காக வேறொருவர் எழுதுவது குற்றமாகும். உண்மை பற்றிய அடையாளப் பத்திரங்களில் மாற்றங்கள் செய்தல், பிழையான விபரங்கள் கொடுத்தல், பிழையான விபரங்களைச் சரியென உறுதிப்படுத்தல் என்பன குற்றமாகும். இவற்றையிட்டு பரீட்சார்த்திகள் எச்சரிக்கை செய்யப்படுகின்றனர்.

16. பரீட்சார்த்தியல்லாத ஒருவர் பரீட்சார்த்திக்கு நேர்மையல்லாத முறையில் உதவி செய்வது பாரதூரமான குற்றமெனக் கருதப்படும்.

பரீட்சார்த்திகள் தம் சொந்த நலனைக்கருதி கீழ்வரும் விதிகளைக் கவனித்தல் வேண்டும்

(i) ஒரு பாடம் தொடங்குவதற்குக் குறிக்கப்பட்ட நேரத்திலும் பார்க்க குறைந்தது 10 அல்லது 15 நிமிடங்களுக்கு முன்பாக பரீட்சை மண்டபத்தில் இருத்தல் வேண்டும். பரீட்சை மண்டபம் இருக்குமிடம் குறிப்பாகத் தெரியாவிடின் பரீட்சை நடக்கும் நாளுக்கு முன்நாளே விசாரித்து அறிந்துகொள்ள வேண்டும்.

(ii) ஒரு பாடத்துக்குத் தோற்றுவதைப் பற்றியோ தோற்றுவதற்குரிய தகுதிகளைப் பற்றியோ ஐயமேதுமிருப்பின் அப்பாடம் தொடங்குமுன் அதை மேற்பார்வையாளரிடமிருந்து தீர்த்துக்கொள்ள வேண்டும். இல்லாவிட்டால் குறிப்பிட்ட பாடத்திற்குத் தோற்றும் தகைமை நிராகரிக்கப்படக்கூடும்.

(iii) நீர் உண்மையான பரீட்சார்த்தியென நிரூபிப்பதற்குரிய சான்றுப்பத்திரங்கள் உம்மிடமிருந்து எதிர்பார்க்கப்பட்டால் ஒவ்வொரு பாடத்துக்குத் தோற்றும் பொழுதும் இப்பத்திரங்களைப் பரீட்சை மண்டபத்துக்கு நீர் கொண்டு வருதல் வேண்டும். தேவையான உறுதிப்பத்திரங்களை நீர் வைத்திருக்காவிடில் பரீட்சைக்குத் தோற்றும் உமது தகைமை நிராகரிக்கப்படும். உண்மை பற்றிய சான்றுப்பத்திரங்களைக் கொண்டுவர மறந்துபோனால் பரீட்சை முடியுமுன்னர் அவற்றைக் காண்பிப்பதாக மேற்பார்வையாளரோடு ஒழுங்கு செய்தல் வேண்டும்.

(iv) சாதாரணமாகப் பரீட்சைக்கு வேண்டிய விடைத்தாள், ஒற்றுத்தாள், கணனி ரேகைத்தாள், பேரேட்டுத்தாள், சுருக்கி எழுதுவதற்குரிய தாள் என்பன கொடுக்கப்படும். வழக்கமாகக் கொடுப்பதற்கு மாறாக வேறெவையேனும் கொடுக்கப்பட்டால் அதைப்பற்றி மேற்பார்வையாளருக்கு உடனே அறிவிக்க வேண்டும். உமக்கெனக் கொடுபடாத தாள் எவற்றையும் உபயோகிக்கக் கூடாது. மேல் மிச்சமாகக் கொடுக்கப்பட்ட எவற்றையும் சேதப்படுத்தாமல் உமது மேசைமேல் விட்டுவிடுக. மடக்கை வாய்ப்பாடுகள் கொடுக்கப்பட்டால் கவனமாக உபயோகித்த பின்னர் அவற்றை உமது மேசைமேல் விட்டுவிட வேண்டும்.

(v) சொந்தப் பேனைகள், மை, அடிமட்டைகள், கணித உபகரணக் கருவிகள், பென்சில், அழிறப்பர்கள், நிறப் பென்சில்கள், வர்ணக்கட்டிகள், நீர்வர்ணங்கள், விஞ்ஞானப் பிரதி செய்யும் தாள்கள் முதலியவற்றைப் பரீட்சார்த்திகள் கொண்டுவருதல் வேண்டும்.

(vi) விடைத்தாள் ஒவ்வொன்றிலும் நீர் உபயோகித்த வேறு தாளிலும் பரீட்சையின் பெயரையும் உமது சுட்டிலக்கத்தையும் கண்டிப்பாகக் குறிப்பாகக் குறிப்பிடுதல் வேண்டும். விடையெழுதுந் தாளில் இரு பக்கத்திலும் துப்புரவாகவுந் தெளிவாகவும் எழுதுதல் வேண்டும். ஒரு விடையிலுள்ள ஒவ்வொரு பகுதி விடைக்குமிடையில் ஒவ்வொரு வெற்றுக்கோடு விடப்பட வேண்டும். முழு விடைக்குப் பின்னர் ஒரு கோடு கீறப்பட வேண்டும். அல்லது சில வெற்றுக்கோடுகள் விடப்பட வேண்டும். விடைகளை ஒன்றோடொன்று நெருக்கி எழுத வேண்டாம்.

(vii) உமக்குக் கொடுக்கப்பட்ட விடைத்தாளிலுள்ள இடதுபக்க அடைப்பில் வினாவுக்குரிய இலக்கத்தை எழுதுக. வலதுபக்கத்து அடைப்பு, பரிசோதகரின் உபயோகத்துக்காக விடப்பட்டிருக்கிறது. தவறான இலக்கங்களிடின் சங்கடங்கள் ஏற்படுமாகையால் உமது விடைக்குரிய சரியான இலக்கங்களையிடுக.

(viii) எல்லா விபரமாக கணக்கீடுகளையும் பெரும்படியான வேலைகளையும் நீர் செய்யும் கணக்குக்குரிய செய்கை வழிகளில் முறையான அமைப்பு முறையில் தருக. வரைபடங்கள், கோட்டு ரூபங்கள், சிறு படங்கள் என்பன திட்டமாகவும் பெரிதாகவும் இருக்க வேண்டும். வரைபடத்தை அல்லது கோட்டு ரூபத்தை அல்லது சிறுபடத்தைக் காட்டி எழுதப்படும் விடை, விடைத்தாளில் மறுபக்கத்தில் தொடரப்படுமானால் அவ்வடிவங்கள் மறுபடியும் கீறப்பட வேண்டும்.

(ix) ஒவ்வொரு பாடத்தின் முடிவிலும் நீர் எழுதிய முறைப்படி உமது விடைத்தாள்களைக் கவனமாக ஒழுங்குபடுத்தி நெருக்கமாகவும் உறுதியாகவும் ஒன்றுசேர்த்து இடதுபக்கத்து மேல் மூலையில் (வலதுபக்க மேல் மூலையிலன்று) உமக்குக் கொடுக்கப்பட்ட நூலால் கட்டுதல் வேண்டும்.

(x) வினாப்பத்திரத்தின் தலைப்பில் கட்டாய வினாக்கள் தெரிவுக்குரிய வினாக்கள் பற்றியுள்ள விதிகளைக் கவனமாக அவதானித்தல் வேண்டும். இவற்றைக் கவனியாது விடைகள் எழுதப்படின் உமது சித்தியின் தரம் பாதிக்கப்படும்.

(xi) உமது விடைத்தாள்களைத நேரடியாக மேற்பார்வையாளரிடமோ கவனிப்பாளரிடமோ கொடுத்தல் வேண்டும். அல்லது இவர்களில் ஒருவர் வந்து ஏற்றுக்கொள்ளும் வரை உமது ஆசனத்தில் இருக்க வேண்டும். இது செய்யத் தவறினால் உமது விடைத்தாள் காணாமற் போய் இப்பாடத்துக்கு நீர் வரவில்லையென எண்ணப்படும். எக்காரணம் பற்றியும் சேவகரிடமோ பணியாளரிடமோ விடைத்தாள்களைக் கொடுத்தல் கூடாது.

(xii) மேற்பார்வையாளரிடம் அல்லது கவனிப்பாளரிடம் பேச அல்லது மேலதிகமான விடைத்தாள்கள் முதலியன பெறவேண்டினால் உமது ஆசனத்திலிருந்து கையை உயர்த்திக்காட்ட வேண்டும்.

பரீட்சை ஆணையாளர் நாயகம்.

இலங்கை பரீட்சைத் திணைக்களம்,
பெலவத்தை,
பத்தரமுல்லை.

# பதவிகள் - வெற்றிடம்

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

தமிழ் மொழி மூலம் விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி அம்பாறை மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் காரியாலயம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, மார்கழி மாதம் 05 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, பத்தரமுல்லை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2011.10.12.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| அம்பாறை | அட்டாளைச்சேனை | (தமிழ் மொழி) கோணாவத்தை பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், அம்பாறை |
| அம்பாறை | அட்டாளைச்சேனை | (தமிழ் மொழி) ஒலுவில் பாலமுனை பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், அம்பாறை |

11-40

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - கம்பஹா மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் காரியாலயம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, மார்கழி மாதம் 05 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, பத்தரமுல்லை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2011.10.17.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| கம்பஹா | களனிய | வெதமுல்ல - வனவாசல பகுதியில் சியனா கோரளை மேற்கு பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கம்பஹா |
| கம்பஹா | நீர்கொழும்பு | கொச்சிக்கடை பிரிவில் பிறப்பு மற்றும் இறப்பு அளுத்குறு கோரளை பிரிவில் விவாகப் (பொது) பதிவாளர் பதவி | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், கம்பஹா |

11-65

## பதிவாளர் நாயகம் திணைக்களம்

விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவி - புத்தளம் மாவட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளில் உள்ள விவாக, பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பதிவாளர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றன.

1. விண்ணப்பதாரர்கள் உரிய பிறப்பு மற்றும் இறப்பு பதிவு செய்கின்ற பிரிவுக்குள் நிரந்தர முகவரியை உடையவர்களாகவும், குறிப்பிடத்தக்களவு சொத்துக்களுக்கு உரிமையாளிகளாகவும், பிரதேச மக்களின் நன்மதிப்பையும் ஒத்தாசையையும் பெறுகின்றவர்களாகவும் இருத்தல் வேண்டும்.

2. இப்பதவிக்காக பெண்/ஆண் இருபாலாருக்கும் விண்ணப்பிக்க முடியும்.

3. விண்ணப்பதாரரின் வயது 30 வருடங்களுக்குக் குறையாமல் இருப்பதோடு, 60 வருடங்களுக்கு மேற்படாதும் இருத்தல் வேண்டும்.

4. விண்ணப்பதாரர்கள் விவாகம் செய்தவர்களாக இருத்தல் வேண்டும்.

5. கல்வி மற்றும் ஏனைய தகைமைகள் போன்றவை சம்பந்தமான மேலதிக விபரம் உரிய மாவட்ட செயலாளர் காரியாலயம், காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகம், பிரதேச செயலாளர் அலுவலகம், கிராம அலுவலர் அலுவலகம், கிராம அபிவிருத்திச் சபை மற்றும் கூட்டுறவுச் சங்கம் போன்ற பதிவுப் பிரிவின் பொது இடங்களில் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ள அறிவித்தல்களிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

6. இது சம்பந்தமாக தேவையான விண்ணப்பங்களை உரிய மாவட்டத்தின் மாவட்ட செயலாளர் (அரசாங்க அதிபர்) அலுவலகத்திலிருந்தும் மற்றும் காணி மற்றும் மாவட்டப் பதிவாளர் அலுவலகத்திலிருந்தும் பெற்றுக்கொள்ளலாம்.

7. பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை 2011, மார்கழி மாதம் 05 ஆந் திகதியோ அதற்கு முன்போ அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு கிடைக்குமாறு பதிவுத் தபால் மூலம் அனுப்புதல் வேண்டும்.

ஈ. எம். குணசேகர,
பதிவாளர் நாயகம்.

பதிவாளர் நாயகம் திணைக்களம்,
இல. 234/A3, பத்தரமுல்லை, டென்சில் கொப்பேகடுவ மாவத்தை,
பத்தரமுல்ல,
2011.10.17.

### அட்டவணை

| மாவட்டம் | பிரதேச செயலாளர் பிரிவு | விண்ணப்பங்கள் கோரப்படும் பிரிவும் பதவியும் | விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி |
|---|---|---|---|
| புத்தளம் | புத்தளம் | புத்தளம் நகரப் பிரிவில் பிறப்பு, இறப்பு வைத்தியப் பதிவாளர் | மாவட்ட செயலாளர்/ மேலதிக பதிவாளர் நாயகம், மாவட்ட செயலாளர் அலுவலகம், புத்தளம் |

11-66

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**உயர் கல்வி அமைச்சு**

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்

**உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்களுக்கு மாணவர்களை அனுமதித்தல் - கல்வி ஆண்டு 2012**

*2010 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்னர் க. பொ. த. (உ. த.) பரீட்சையின் புதிய அல்லது பழைய பாடத்திட்டத்தை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்துள்ளோரிடமிந்து இலங்கை தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகத்தினால் (SLIATE) நடாத்தப்படுகின்ற உயர் தேசிய டிப்ளோமாவிற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.*

**விண்ணப்பிக்கும் விதம் :**

*கீழே தரப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப்படிவத்திற்கு அமைய தயாரிக்கப்பட்டு முறையாக பூர்த்திசெய்யப்பட்டுள்ள விண்ணப்பங்கள், கணக்கு இல. 025-100133397613இல் இலங்கையின் மக்கள் வங்கி, பார்க் வீதி கிளை (கொழும்பு) அல்லது வேறேதேனும் மக்கள் வங்கியில் ரூபா 350 ஐ பற்று வைத்து பெற்றுக்கொள்ளப்பட்ட பற்றுச்சீட்டுடன் பதிவுத்தபாலில், பிரிவு "அ" இல் குறிப்பிடப்பட்டுள்ள உரிய உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம்/பிரிவிற்கு நேரடியாக அனுப்பப்படுதல் வேண்டும். "விண்ணப்பிக்கும் பாடநெறியை" கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். ஒன்று அல்லது ஒன்றிற்கு மேற்பட்ட நிறுவகங்களுக்கு விண்ணப்பிக்க விரும்பும் விண்ணப்பதாரிகள், விண்ணப்பிக்கப்படும் ஒவ்வொரு விண்ணப்பமும் ரூபா 350 பெறுமதியான தனித்தனி பற்றுச்சீட்டை இணைத்து தனித்தனி விண்ணப்பப்படிவத்தில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். மேலே குறிப்பிடப்பட்ட கணக்கு இலக்கத்தை தவிர்ந்த ஏனைய கணக்கு இலக்கங்களுக்கு பற்று வைக்கப்பட்டுள்ள விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*விண்ணப்ப முடிவுத் திகதிக்கு பின்னர் கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் கவனத்திற்கொள்ளப்பட மாட்டா.*

*பிரிவு 'அ' இல் நடாத்தப்படும் பாடநெறிகள் போன்றே உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்கள்/உ. தொ. நி. பிரிவுகளின் முகவரிகள் தரப்பட்டுள்ளன. தங்கள் தகைமைகளுக்கேற்ப பிரிவு "ஆ" வில் தரப்பட்டுள்ள பட்டியலிலிருந்து தங்கள் கல்வி நிகழ்ச்சித்திட்டங்களை தெரிவுசெய்தல் வேண்டும்.*

**விரிவுரைகளின் வகை :**

*பகல்/முழுநேர பாடநெறிகள் : வேலைநாட்கள் காலப்பகுதி, பகல் நேரம்*

*பகுதி நேர பாடநெறிகள் : வார இறுதி நாட்கள் காலப்பகுதி, பகல் நேரம்*

*உரிய துறையில் கடமையாற்றுவோருக்கே பகுதி நேர பாடநெறிகள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.*

***பாடநெறிக் கட்டணங்கள்.*** *- பகல் நேர பாடநெறிகளுக்கு எவ்வித பாடநெறிக் கட்டணமும் அறவிடப்படமாட்டாது. ஆங்கில உயர் தேசிய டிப்ளோமா பாடநெறிக்காக ஒரு தவணைக்கு நான்காயிரம் ரூபா (ரூ. 4,000) ஆகும். கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா பகுதி நேர மாணவர்களுக்கான 1 ஆம் மற்றும் 2 ஆம் ஆண்டு தவணைக்கான பாடநெறி கட்டணங்கள் ஒரு தவணைக்கு இரண்டாயிரம் ரூபா (ரூ. 2,000 ஆகும் கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா பகுதி நேர மாணவர்களுக்கான 3 ஆம், 4 ஆம் ஆண்டு தவணைக்கான பாடநெறி கட்டணங்கள் ஒரு தவணைக்கு மூவாயிரம் ரூபா (ரூபா 3,000) ஆகும். இது வருடாந்தம் மீளாய்வு செய்வதற்கு ஆட்பட்டதாகும். தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா பகுதி நேர மாணவர்களுக்கு ஒரு தவணைக்கு பத்தாயிரம் ரூபா (ரூ. 10,000) ஆகும். (ஒரு வருடத்துக்கு இரண்டு தவணைகள்).*

***நேர்முகப் பரீட்சை.*** *- குறுகிய பட்டியற்படுத்தப்பட்ட விண்ணப்பதாரிகள் தேர்விற்காக எழுத்துமூலப் பரீட்சை ஒன்றுக்கு தோற்ற வேண்டும் அல்லது ஒரு நேர்முகப் பரீட்சைக்கு தோற்ற வேண்டும். மாணவர்களின் தேர்வுகள், க. பொ. த. (உ./த.) மொத்தப் புள்ளிகள் மற்றும் Z - புள்ளிகள் அடிப்படையாகக் கொண்டே நடைபெறும். எழுத்துமூலம் நேர்முகப் பரீட்சைக்கு தோற்றும் இடம், நேரம் மற்றும் திகதி மற்றும் நேர்முகப் பரீட்சைக்கு சமர்ப்பிக்கத் தேவையான ஆவணங்கள் என்பன அறிவிக்கப்படும். மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாதபோது கல்வி நிகழ்ச்சித்திட்ட பதிவு நேரத்தில் மூல ஆவணங்களை சமர்ப்பிற்கும் ஒப்பந்தத்தின்மீது சான்றுப்படுத்தப்பட்ட நிழற்பட பிரதிகள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

***தங்குமிட வசதிகள்.*** *- வரையறை செய்யப்பட்ட தங்குமிட வசதிகள், பெண்களுக்காக உ. தொ. நிறுவகம் I, நைவல/தெஹிவளை மற்றும் அதேபோன்று ஆண்களுக்காக உ. தொ. நிறுவகம், ஹார்டி அம்பாறை/மட்டக்குளி ஆகிய இடங்களில் அமைந்து இருக்கின்றன. இவ்வசதி முழுநேர பாடநெறி மாணவர்களுக்கு மட்டும் ஆகும்.*

**பிரிவு 'அ'**

உயர் தொழில்நுட்பவியல் நிறுவகங்கள்/உ. தொ. நி. பிரிவுகளின் முகவரிகள், தொலைபேசி இலக்கங்கள் மற்றும் குறியீட்டு இலக்கங்கள்.

| குறியீட்டு இல. | உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 01 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், மட்டக்குளி | இல. 42, ரொற்றிகோ இடம், கொழும்பு 15 | 011-2529479<br>011-2521152 | எச்என்டிஈ, எச்என்டிஐரி (எவ்ரி), எச் என்டிகியூஎஸ், எச்என்டிபிஎஸ்ஈ |
| 02 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், தெஹிவளை | வைத்தியா வீதி, தெஹிவளை | 011-2714270,<br>011-2738349 | எச்என்டிஏ(எவ்ரி), எச்என்டிஏ(பீரீ), எச்என்டிஎம், எச்என்டிபிஏ எச்என்டிஐரி (எவ்ரி), ஆங்கிலத்தில் எச்என்டி (எவ்ரி), ஆங்கில எச்என்டி (பீரீ), எச்என்டிபிஎவ், எச்என்டிஎவ்ரி, எச்என்டிரிஎச்எம் |
| 03 | காலி உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், லபுதுாவ | ஸ்ரீ தம்ம மாவத்தை, லபுதுாவ, அக்மீமன | 091-2227880,<br>091-2246179 | எச்என்டிஈ, எச்என் டிஏ (எவ்ரி), எச்என் டிஏ(பீரி), எச்என் டிஎம், எச்என்டி ரிஎச்எம், எச்என் டிபிஏ, எச்என்டி ஐரி(எவ்ரி), எச் என்டிஐரி (பீரி), எச்என்டிரி (விவசாய) ஆங்கிலத்தில் எச்என்டி, (எவ்ரி), ஆங்கிலத்தில் எச்என்டி(பீரி), எச்என்டிகியூஎஸ், எச்என்டிபிஎஸ்ஈ |
| 04 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கண்டி | இல. 16, கெப்பெட்டிபொல வீதி, கண்டி | 081-2226644,<br>081-2232097 | எச்என்டிஏ(எவ்ரி), எச்என்டிஏ (பிரி), எச்என்டிஎம், எச்என் டிபிஏ, எச். என்டிஐரி, ஆங்கிலத்தில் எச்என்டி, (எவ்ரி), ஆங்கிலத்தில் எச்என்டி (பீரி), எச் என்டிரிஎச்எம் |
| 05 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், குருநாகல் | இல. 22/1, வில்கொட வீதி, குருநாகல் | 037-2224911,<br>037-2229583 | எச்என்டிஏ (எவ்ரி), எச்என்டிஏ (பிரி), எச்என்டிஎம், எச்என்டிஐரி (எவ்ரி), ஆங்கிலத்தில் எச்என்டி (எவ்ரி), ஆங்கிலத்தில் எச்என்டி (பீரி), எச்என்டிரீஎச்எம் |

| குறியீட்டு இல. | உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 06 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், பதுளை | கிறீன்லண்ட் டிரைவ், பதுளை | 055-2230218, 055-2223818 | எச்என்டிஏ (எவ்ரி), எச் என்டிஏ (பீரி), எச்என்டிஎம், எச்என்டிபிஏ, எச்என்டிஐரி (எவ்ரி), எச்என்டி ஐரி(பீரி), ஆங்கிலத்தில் எச்என்டி(எவ்ரி), ஆங்கிலத்தில் எச்என்டி(பீரி), எச்என்டிரீஎச்பி |
| 07 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், யாழ்ப்பாணம் | இல. 665/5, கடற்கரை வீதி, குருநகர், யாழ்ப்பாணம் | 021-2222595 021-2239803 | எச்என்டிஈ, எச்என் டிஏ(எவ்ரி), எச்என் டிஏ (பீரி), எச்என் டிஎம், எச்என்டிபிஏ, எச்என்டிஐரி (எவ்ரி), எச்என்டிஐரி (பீரி), ஆங்கிலத்தில் எச்என்டி (எவ்ரீ), ஆங்கிலத்தில் எச்என்டி (பீரி), எச்என் டிரிஎச்எம் |
| 08 | உயர் தொழில்நுட்ப நிறுவகம், நைவல | நைவல, எஸ்ஸல்ல, வேயன்கொடை | 033-2287519, 033-2292544 | எச்என்டிஏ (எவ்ரி), எச்என்டிஏ(பீரி), எச்என்டிஐரி(எவ்ரி) எச்என்டிரி (விவசாயம்), எச்என்டிஎவ்ரி |
| 09 | ஹார்டி உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், அம்பாறை | இங்கினியாகலை வீதி, அம்பாறை | 063-2222056, 063-2223035 | எச்என்டிஏ (எவ்ரி), எச்என்டிஏ(பீரி), எச்என்டிஎம், எச்என் டிஐரி(எவ்ரி), எச் என்டிரி (விவசாயம்) ஆங்கிலத்தில் எச் என்டி (எவ்ரி) ஆங்கிலத்தில் எச்என்டி (பீரி) |
| 10 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், திருகோணமலை | கண்ணியா வீதி, வரோதய நகர், திருகோணமலை | 026-3262937 | எச்என்டிஏ (எவ்ரி), எச்என்டிஏ(பீரி), எச்என்டிஐரி(எவ்ரி), ஆங்கிலத்தில் எச்என்டி (எவ்ரி), ஆங்கிலத்தில் எச்என்டி (பீரி) |
| 11 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம், கேகாலை | பண்டாரநாயக்க மாவத்தை, கேகாலை | 035-2221297 035-2221713 | எச்என்டிஏ(எவ்ரி), எச்என்டிஏ (பீரி), எச்என்டிஐரி(எவ்ரி) ஆங்கிலத்தில் எச்என்டி (எவ்ரி), ஆங்கிலத்தில் எச்என்டி(பீரி) |

| குறியீட்டு இல. | உ. தொ. நி./உ. தொ. நி. பிரிவு | முகவரிகள் | தொலைபேசி இல. | நடாத்தப்படுகின்ற பாடநெறிகளின் பெயர்கள் |
|---|---|---|---|---|
| 12 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, அநுராதபுரம் | தொழில்நுட்பக் கல்லூரி, புதிய நகர், அநுராதபுரம் | 025-2234417 | எச்என்டிஏ(எவ்ரி), எச்என்டிஏ(பீரி), ஆங்கிலத்தில் எச்என்டி(பீரி) |
| 13 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, இரத்தினபுரி | இல. 14, புதிய நவீன சந்தை, இரத்தினபுரி | 045-2230780 | எச்என்டிஏ(எவ்ரி) |
| 14 | உயர் தொழில்நுட்ப நிறுவகப் பிரிவு சம்மாந்துறை | பிரதான வீதி, சம்மாந்துறை | 067-2261304 | எச்என்டிஏ (எவ்ரி), எச்என்டிஏ(பீரி), ஆங்கிலத்தில் எச்என் டி (பீரி) |
| 15 | உயர் தொழில்நுட்ப நிறுவகப் பிரிவு, மட்டக்களப்பு | "பல்நோக்கு கட்டிடம்", கோவில்குளம் கிழக்கு, ஆரயம்பதி | 065-2247519 | எச்என்டிஏ(எவ்ரி) எச்என்டிஏ (பீரி), ஆங்கிலத்தில் எச்என்டி (பீரி) |
| 16 | உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவு, தங்காலை | வலயக் கல்வி அலுவலகம், தங்காலை | 047-2240267, 091-2246179 | எச்என்டிஏ (பீரி), |

**குறிப்பு :-**

1. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பதாரிகள் வாரநாட்களில் வகுப்புகளில் கலந்துகொள்ளுதல் வேண்டும். அதேபோன்று தேவை எழுமானால் வார இறுதி காலப்பகுதியில் குறிப்பிட்ட நாட்களிலும் கலந்துகொள்ளுதல் வேண்டும்.

2. கணக்கியலில் உயர் தேசிய டிப்ளோமா (நாள்/முழுநேரம்) இன் போதனா மொழி, முதலாம் இரண்டாம் ஆண்டுகளில் ஆங்கிலமொழிமூலம் வேலைநாட்களில் நடாத்தப்படும். மூன்றாம் நான்காம் ஆண்டுகளில் இக்கல்வி நிகழ்ச்சித்திட்டங்கள் வாரஇறுதி நாட்களில் நடாத்தப்படும், போதனாமொழி ஆங்கிலம் ஆகும்.

3. முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா (பகல்/முழுநேரம்) பாடநெறியின் முதலாம் இரண்டாம் ஆண்டுகள் வாரநாட்களில் பகல் காலப்பகுதியில் நடாத்தப்படும் மற்றும் மூன்றாம் ஆண்டு வார இறுதிநாட்களில் நடாத்தப்படும்.

4. க.பொ. த. (உ. த.) புதிய பாடத்தில் தகைமைபெற்ற விண்ணப்பதாரிகள் பொது வினாப்பத்திரத்தில் சாதாரண சித்தி கட்டாயம் பெறல் வேண்டும்.

5. ஒவ்வொரு கல்வி நிகழ்ச்சித்திட்டம் மற்றும் ஒவ்வொரு தேர்விற்கான தேர்வுப் பிரமாணமாக க.பொ. த. (உ. த.) இன் மொத்தப்புள்ளிகள் Z புள்ளிகள் கருத்திற்கொள்ளப்படும்.

6. கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்குரிய துறையில் அல்லது பாடங்களில் சித்தியடைந்துள்ள விண்ணப்பதாரிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

7. 23 வயதிற்குட்பட்டோருக்கு பகல்நேர பாடநெறிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

8. விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை 25 பேருக்கு குறைவாக இருந்தால் அந்நிகழ்ச்சித்திட்டம் குறிப்பிட்ட உ. தொ. நி. அல்லது உ. தொ. நி. பிரிவினால் நடாத்தப்படமாட்டாது.

9. விண்ணப்பதாரிகளின் எண்ணிக்கை எதிர்பார்க்கப்பட்ட மாணவர் எண்ணிக்கையைவிட கூடுதலாக இருப்பின் நிறுவக வாரியாக விவேகப் பரீட்சை ஒன்று நடாத்தப்படும்.

10. குறிப்பிட்ட உ. தொ. நி. அல்லது உ. தொ. நி. பிரிவில் முழுநேர பாடநெறிக்கு தெரிவுசெய்யப்பட்ட பின்னர், அம்மாணவர்கள் எவ்வித காரணம் கொண்டும் வேறேதேனும் உயர் தொழில்நுட்பவியல் நிறுவகத்திற்கு மாற்றப்படமாட்டார்கள்.

**பிரிவு "ஆ"**

1. **பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா (சிவில்/மின்சார/இயந்திரவியல்)** . - **"எச்என்டிஈ" (முழுநேரம்) - 3 1/2 வருடங்கள்**
**பரிமாண நில அளவை உயர் தேசிய டிப்ளோமா** - **"எச்என்டிகியுஎஸ்" (முழுநேரம்) - 3 1/2 வருடங்கள்**

**கட்டிட சேவைகள் பொறியியல் உயர் தேசிய டிப்ளோமா** - **"எச்என்டிபிஎஸ்ஈ" (முழுநேரம்) - 3 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சை புதிய பாடத்திட்டத்தில் இணைந்த கணிதம், இரசாயனவியல் மற்றும் பௌதீகவியலில் ஒரே தடவையில் மூன்று சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

அத்துடன்

(ii) க.பொ.த. (சா.த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

2. **கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிஏ" (முழுநேரம்) - 4 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வரும் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சை (பழைய பாடத்திட்டம்) இல் ஒரே தடவையில் எல்லா நான்கு பாடங்களிலும் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். ஆகக்குறைந்தது இரண்டு பாடங்களில் ஒரே அமர்வில் திறமைசித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றில் ஒன்று தூயகணிதம் அல்லது கணக்கியலாக இருத்தல் வேண்டும்.

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதத்தில் திறமை சித்தி பெற்றிருந்தால், க. பொ. த. (உ.த.) பரீட்சையில் தூயகணிதம் அல்லது கணக்கியலில் திறமை சித்திக்கு மாற்றீடாக கருத்திற்கொள்ளப்படும்.

அல்லது

(ii) க.பொ.த. (உ.த.) பரீட்சையில் (புதிய பாடத்திட்டம்) இல் ஒரே அமர்வில் மூன்று சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும். இம்மூன்றில் ஒன்று இணைந்த கணிதம் அல்லது கணக்கியல் ஆக இருத்தல் வேண்டும். இம்மூன்று பாடங்களில் ஆகக்குறைந்தது இரண்டு திறமை சித்திகள் பெற்றிருத்தல் வேண்டும்.

க.பொ.த. (சா.த.) பரீட்சையில் கணிதத்தில் திறமை சித்தி பெற்றிருந்தால், க. பொ. த. (உ.த.) பரீட்சையில் இணைந்த கணிதம் அல்லது கணக்கியலில் ஆகியவற்றில் ஒன்றின் திறமை சித்திக்கு மாற்றீடாக கருத்திற்கொள்ளப்படும்.

அல்லது

(iii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் தேசிய சான்றிதழ் பின்பற்றுவோர் ;

அத்துடன்

(iv) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி.

2.1 **கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிஏ" (பகுதிநேரம்) - 4 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ.த.) பரீட்சை (புதிய பாடத்திட்டம்) அல்லது பழைய பாடத்திட்டத்தில் முறையே ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் அல்லது நான்கு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவலர் தேசிய சான்றிதழை பூர்த்திசெய்திருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் வியாபார கல்விகள் (கணக்கியல் குழு) தேசிய சான்றிதழை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தேசிய சான்றிதழை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும் ;

மற்றும்

செயன்முறை அனுபவம்.- விண்ணப்பதாரி அரசாங்க நிறுவனம்/பொது தொழில்முயற்சி அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் இத்துறையில் சேவையாற்றுதல் வேண்டும்.

பின்வரும் தகைமை கொண்டுள்ளோர் 1 ஆம் ஆண்டில் விலக்களிக்கப்படுவர் அத்துடன் இடம் மற்றும் ஏனைய அனுமதி தேவைபாடுகளில் தகைமை இருப்பின் 2 ஆம் ஆண்டிற்கு அனுமதிக்கப்படுவார்கள் :-

(i) வியாபார கல்விகள்/வியாபார நிதி/வியாபார நிருவாகத்தில் தேசிய சான்றிதழ்
(ii) வர்த்தகம்/முகாமைத்துவம் இரண்டாம் ஆண்டில் உயர் தேசிய டிப்ளோமா
(iii) விஞ்ஞானமாணி (பிஎஸ்சி) (வியாபார நிருவாகம்), அல்லது வர்த்தகமாணி (பிகொம்) அல்லது விஞ்ஞானமாணி (பிஎஸ்சி) (கணக்கியல்)
(iv) "ஐசீஏஎஸ்எல்" பாகம் I மற்றும் II
(v) "சீஐஎம்ஏ" பாகம் I மற்றும் II
(vi) "ஏஏரீ" நிலை III

**3. முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிஎம்" (முழுநேரம்) - 3 வருடங்கள்**

**உல்லாச மற்றும் உபசரணை முகாமைத்துவ உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிரீஎச்எம்" (முழுநேரம்) - 3 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) ஏதேனும் துறையில், க.பொ.த. (உ. த.) பரீட்சை (பழைய பாடத்திட்டம்) இல் நான்கு பாடங்களிலும் ஒரே அமர்வில் சித்திபெற்றிருத்தல்/க.பொ.த.(உயர்தர) பரீட்சை (புதிய பாடத்திட்டம்) இல் ஒரே தடவையில் மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் அத்துடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

அல்லது

(ii) தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் வியாபார கல்விகள் (பொது நிருவாகம்/சந்தைப்படுத்தல்) தேசிய சான்றிதழ் அல்லது கணக்கீட்டு தொழில்நுட்பவலர் தேசிய சான்றிதழ்.

மற்றும்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் கணிதம் மற்றும் ஆங்கிலத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**4. வியாபார நிர்வாகம் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிபிஏ" (முழுநேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சை (பழைய பாடத்திட்டம்) இல் பொருளாதாரம், வர்த்தகமும் நிதியும் மற்றும் கணக்கியலில் சித்தி பெற்றிருத்தல் அல்லது க. பொ. த. (உ. த.) பரீட்சை (பழைய பாடத்திட்டம்) மேற்கூறப்பட்ட மூன்று பாடங்களில் இரண்டு பின்வருவனவற்றில் ஒன்றாய் இருத்தல் வேண்டும் :-

அதே பரீட்சையில் அரசியல் விஞ்ஞானம், தூயகணிதம், புவியியல், சிங்களம், தமிழ், ஆங்கிலம், தர்க்க சாஸ்த்திரம், வரலாறு, வியாபார நிலையியல்

அல்லது

க. பொ. த. (உ.த.) பரீட்சை (புதிய பாடத்திட்டம்) இல் மேற்கூறப்பட்ட மூன்று பாடங்களில் இரண்டில் சித்தி பெற்றிருத்தல் அத்துடன் இதே பரீட்சையில் புவியியல், மனையியல், அரசியல் விஞ்ஞானம், தர்க்க சாஸ்திரமும் விஞ்ஞானசார் முறைகளும், விவசாய விஞ்ஞானம், இணைந்த கணிதம் மற்றும் வியாபார நிலையியல் ஆகியவற்றில் ஒன்றில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவலர் தேசிய சான்றிதழை வெற்றிகரமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

அத்துடன்

க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல்.

**5. தகவல் தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிஐரி" (முழுநேரம்) - 3 வருடங்கள் (பகுதி நேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரி பின்வருவனவற்றை கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க.பொ.த. (உ. த.) பரீட்சை (பழைய பாடத்திட்டம்) இல் ஒரே அமர்வில் நான்கு பாடங்களில் சித்திபெற்றிருத்தல்

அல்லது

(ii) க. பொ. த. (உ.த.) பரீட்சை (புதிய பாடத்திட்டம்) இல் ஒரே அமர்வில் மூன்று பாடங்களில் சித்திபெற்றிருத்தல்

மற்றும்

க. பொ. த. (சா.த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்திபெற்றிருத்தல்.

**குறிப்பு**.- (பகுதிநேர மாணவர்களுக்கு மட்டும்) த. தொ. துறையில் சேவையாற்றுதல் வேண்டும்.

**6. தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா- "எச்என்டிரி" (விவசாயம்) (முழு நேரம்) - 3 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சை (பழைய பாடத்திட்டம்) இல் உயிர்- விஞ்ஞான துறையில் ஒரே தடவையில் நான்கு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும். அவற்றில் இரண்டு பின்வரும் பாடங்களைக் கொண்டிருத்தல் வேண்டும் :

இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், தாவரவியல், விலங்கியல் மற்றும் பௌதீகம்

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை புதிய பாடத்திட்டத்தில் உயிர்-விஞ்ஞான துறையில் 3 பாடங்களில் சித்திபெற்றிருத்தல் வேண்டும் ; அவற்றில் இரண்டு பின்வருவனவற்றைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் :

இரசாயனவியல், விவசாய விஞ்ஞானம், உயிரியல் மற்றும் பௌதீகம்

அத்துடன்

(iii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**7. ஆங்கிலத்தில் உயர் தேசிய டிப்ளோமா "எச்என்டி இன் இங்கிலிஷ்" (முழு நேரம்) - 3 வருடங்கள் (பகுதி நேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சை (பழைய பாடத்திட்டம்) நான்கு பாடங்களில் சித்தி ; அத்துடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழி அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை (புதிய பாடத்திட்டம்) இல் மூன்று பாடங்களில் சித்தி அத்துடன் க. பொ. த. (சா. த) பரீட்சையில் ஆங்கில மொழி அல்லது ஆங்கில இலக்கியத்தில் திறமைச் சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(iii) கல்விக் கல்லூரியினால் வழங்கப்பட்ட டிப்ளோமா அல்லது ஆங்கில நிபுணத்துவ ஆசிரியர் பயிற்சி சான்றிதழ்

அல்லது

(iv) க. பொ. த. (உ. த.) பரீட்சை (புதிய பாடத்திட்டம்) இல் மூன்று பாடங்களில் சித்திகள் அத்துடன் க. பொ. த. (உ. த.) பரீட்சையில் பொது ஆங்கிலத்தில் திறமைச் சித்தி

அல்லது

(v) க. பொ. த. (உ. த.) பரீட்சை (புதிய பாடத்திட்டம்) இல் மூன்று பாடங்களில் சித்திகள் அத்துடன் தொழில்நுட்ப கல்வி மற்றும் பயிற்சி திணைக்களத்தினால் நடாத்தப்படும் வர்த்தகம், கைத்தொழில் மற்றும் மேலும் கல்விக்கான ஆங்கில தேசிய சான்றிதழ் அல்லது அதற்குச் சமமான தகைமைகள்

**8. வியாபார நிதி உயர் தேசிய டிப்ளோமா - "எச்என்டிபிஎவ்" (முழு நேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சை (பழைய பாடத்திட்டம்) இல் ஒரே அமர்வில் பொருளாதாரம், வர்த்தகமும் நிதியும், கணக்கியல் உட்பட நான்கு பாடங்களில் சித்தி

அல்லது

(ii) க. பொ. த. (உ. த.) பரீட்சை (புதிய பாடத்திட்டம்) இல் ஒரே அமர்வில் பொருளாதாரம், வியாபார கல்விகள் மற்றும் கணக்கியல் உட்பட அல்லது பின்வரும் பாடங்களில் ஒன்றுடன் மேற்கூறப்பட்ட பாடங்கள் இரண்டில் சித்தி பெற்றிருத்தல் வேண்டும் :-

புவியியல், மனையியல் பொருளாதாரம், அரசியல் விஞ்ஞானம், தர்க்க சாஸ்திரம், விஞ்ஞானசார் முறைகள், விவசாய விஞ்ஞானம், அல்லது இணைந்த கணிதம்

அல்லது

(iii) தொழில்நுட்பக் கல்வி மற்றும் பயிற்சித் திணைக்களத்தினால் நடாத்தப்படும் கணக்கீட்டு தொழில்நுட்பவலர் தேசிய சான்றிதழை வெற்றிகரமாகப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

மற்றும்

(iv) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கிலம் மற்றும் கணிதத்தில் சாதாரண சித்தி பெற்றிருத்தல் வேண்டும்.

**9. உணவு தொழில்நுட்பவியல் உயர் தேசிய டிப்ளோமா- "எச்என்டிஎவ்ரி" (முழு நேரம்) - 2 1/2 வருடங்கள்**

விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றைக் கொண்டிருத்தல் வேண்டும் :-

(i) க. பொ. த. (உ. த.) பரீட்சை (புதிய பாடத்திட்டம்) இல் ஒரே அமர்வில் உயிரியல் அல்லது பௌதீக விஞ்ஞான துறையில் மூன்று பாடங்களில் சித்தியுடன்

மற்றும்

(ii) க. பொ. த. (சா. த.) பரீட்சையில் ஆங்கில மொழியில் சாதாரண சித்தி

1. **கணக்கியல் உயர் தேசிய டிப்ளோமா சான்றிதழ்**.- அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்தினால் வழங்கப்பட்ட வர்த்தகமாணி (சாதாரண சித்தி) பட்ட தகைமைக்கு மாற்றீடாக ஒற்றோபர், 2008 இன் 46/90 (iii) ஆம் இலக்க சுற்றறிக்கை மூலம் செல்லுபடியாக்கப்பெற்றது.

2. கல்வி நிகழ்ச்சித்திட்டத்திற்கான உங்கள் விருப்பு கட்டளை, உங்கள் தகைமையை அடிப்படையாகக் கொண்ட அனுமதிக்காக கருதப்படவேண்டிய தெரிவாக குறிப்பிடப்படல் வேண்டும்.

**தயவுசெய்து கவனிக்கவும்**.- இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவக பணிப்பாளர் நாயகத்தின் தீர்மானமே, 2012 ஆம் கல்வி ஆண்டிற்கான உயர் தொழில்நுட்பவியல் நிறுவகம்/உயர் தொழில்நுட்பவியல் நிறுவகப் பிரிவில் மாணவர்களுக்கான அனுமதிக்கான இறுதித் தீர்மானமாக இருக்கும்.

விண்ணப்ப முடிவுத் திகதி : 25.11.2011.

(பேராசிரியர்) கே. கபில சீ. கே. பெரேரா,
பணிப்பாளர் நாயகம்.

இலங்கை உயர் தொழில்நுட்பவியல் கல்வி நிறுவகம்,
இல. 382, புதிய கண்டி வீதி,
மாலபே.
இணையத்தளம் : www.sliate.net

*SPECIMEN APPLICATION FORM*

**SRI LANKA INSTITUTE OF ADVANCED TECHNOLOGICAL EDUCATION (SLIATE)**

*Admission of Student to the Higher National Diploma in Engineering (HNDE)/Higher National Diploma in Quantity Surveying/ Higher National Diploma in Building Services Engineering Course* - Academic Year 2011/ 2012

| *Name of the Course* | *Order of Preference* |
|---|---|
| 1 ............................ | ........................................... |
| 2 ............................ | ........................................... |
| 3 ............................ | ........................................... |

1. Name with initials :

| |
|---|
| |

2. Names denoted by Initials :

| |
|---|
| |

3. National Identity Card No. :

| |
|---|
| |

4. Date of Birth :

| | | |
|---|---|---|
| | | |

5. Sex : (Male/Female) :

| | |
|---|---|
| | |

6. Permanent Address (Within the box below) :

| |
|---|
| |

7. Administrative District :

| |
|---|
| |

8. Field of Engineering in order of preference :

| |
|---|
| 1st Preference |
| 2nd Preference |
| 3rd Preference |

9. Result for English Language at the G. C. E. (O/L) :

| Year | Index No. | Grade |
|---|---|---|
| | | |

10. Result of the Best Attempt at the G. C. E. (A/L) Examination (on or before 2010) :

| *Subject* | *Grade* |
|---|---|
| 1. Combined Mathematics | |
| 2. Physics | |
| 3. Chemistry | |
| 4. Common General Test | |
| Z-Score | |

| Year | Index No. | Medium |
|---|---|---|
| | | |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| Attempt | 1st | | 2nd | | 3rd | |

I hereby declare that I am not following any other full-time course of study in any other state institution. I am aware that my registration will be cancelled at any time during the period of study if it is found that I concurrently follow a full-time course at any other state institution. I certify that the information furnished herein is true and accurate to the best of my knowledge.

......................................,
Signature of Applicant.

Date :-----.

(The Bank receipt for Rs. 350 payable to SLIATE should be annexed)

11-168

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்டரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2010 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2010 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத் திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை - 2011**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **நவெம்பர்** | .. | வெள்ளி | 04.11.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 21.10.2011 |
| | | வெள்ளி | 11.11.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 28.10.2011 |
| | | வெள்ளி | 18.11.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 04.11.2011 |
| | | வெள்ளி | 25.11.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 11.11.2011 |
| **திசெம்பர்** | .. | வெள்ளி | 02.12.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 18.11.2011 |
| | | வெள்ளி | 09.12.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 25.11.2011 |
| | | வெள்ளி | 16.12.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.12.2011 |
| | | வெள்ளி | 23.12.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.12.2011 |
| | | வெள்ளி | 30.12.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.12.2011 |

**அட்டவணை - 2012**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| **சனவரி** | .. | வெள்ளி | 06.01.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 23.12.2011 |
| | | வெள்ளி | 13.01.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 30.12.2011 |
| | | வெள்ளி | 20.01.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 06.01.2012 |
| | | வெள்ளி | 27.01.2012 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 13.01.2012 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.